Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC. 35/2024** |
| Deposition of witness for | :: | **PW.4** |
| Name | :: | **பரமசிவம் ( சார்பு ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**03.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாலும், மற்ற அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் அரங்கநாதன் அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்று விட்டபடியாலும் நீதிமன்ற கால விரயத்தினை கருத்தில் கொண்டு மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 27.06.2023ம் தேதி இரவு 08.00 மணிக்கு அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் சந்திரமோகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அருப்புக்கோட்டை காந்திநகரை சேர்ந்த செந்தூர் மனைவி

அழகேஸ்வரி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று குற்ற எண். 109/2023 சட்டப்பிரிவுகள் 294(ஆ), 323, 342, 506(1) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **( முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும் விசாரணை வேண்டி சார்பு ஆய்வாளர் அரங்கநாதன் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார்.

3. பின்னர் சார்பு ஆய்வாளர் அரங்கநாதன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்று இரவு 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான ஆத்திபட்டி பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், தனலெட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**4**. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் அழகேஸ்வரி சாட்சிகள் முத்திருளாயி, கோட்டை, கணேசன், மகாலெட்சுமி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான ராஜேந்திரன், தனலெட்சுமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் 28.06.2023ம் தேதி வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான பாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரியை தேடி பல இடங்களில் தக்க துப்பு வைத்துள்ளார்.

6. மேலும் விசாரணையில் எதிரி குருநாதன் புகார்தாரரில் கூறியுள்ளவாறு அசா.1 ஐ போஸ்ட் கம்பத்தில் கட்டி வைக்கவோ, வேனை வைத்து ஏற்றி கொல்ல முயற்சி செய்யவில்லை என்பது தெரிய வந்துள்ளதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(ஆ), 323, 342, 506(1) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்திலிருந்து பிரிவு 342 ஐ நீக்கம் செய்து பிரிவுகள் 294(ஆ), 323,

506(1) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டமாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **( சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி குருநாதன் திருவில்லிபுத்தூர் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் CrL MP No. 3410/2023 ன்படி முன்பிணை மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது 14.07.2023 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதால் எதிரியை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

8. பின்னர் 29.08.2023 ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட அழகேஸ்வரிக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் அண்ணாதுரை அவர்களிடமிருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. பின்னர் 15.09.2023 ம் தேதி எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl OP No. 13907/2023 ன்படி முன்பிணை கோரி தாக்கல் செய்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதால் எதிரியை தேடி பல இடங்களில் தக்க துப்பு வைத்துள்ளார்.

9. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 08.11.2023 ம் தேதி காலை 09.30 மணிக்கு காந்தி நகர் அரசு பெட்ரோல் பல்க் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு நிலைய பாரா வசம் ஒப்படைத்து தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

10. பின்னர் அன்றைய தினம் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி குருநாதன் மீது சட்டப்பிரிவுகள் 294(ஆ), 323, 506(1) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் சொன்ன நேரத்தில் பார்வை மகஜர்,

மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ள என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**